# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**09.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 09.10.2022
   - **உலக தபால் தினம்.**
   - உலக தபால் அமைப்பானது, 1874 ஆம் ஆண்டு **ஸ்விட்சர்லாந்தின் பெர்ன் நகரில்** தொடங்கப்பட்டது.
   - உலக தபால் அமைப்பை நினைவுபடுத்தும் விதமாக **1969 அக்டோபர் 9 ஆம்** தேதி உலக தபால் தினம் அறிவிக்கப்பட்டது.
   - இந்த துரையின் சேவைகளை பாராட்டும் விதமாகவும், இதன் திட்டங்கள் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

## மாநில செய்திகள்

1. மாணவர்களுக்கு புதிய 'செயலி'
   - பள்ளி கல்வித்துறையில் புதிய திட்டங்கள் தீட்டுவதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட நவீனமாக்கப்பட்டு வருவதால் ஏராளமான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
   - மேலும் மாணவர்கள் பாடத்தை புரிந்து படிக்க வகை செய்யும் **புதிய செயலி** (ஆப்) தொடங்கப்பட உள்ளது.
   - முதலமைச்சரின் **காலை உணவு திட்டத்திற்கு வழிகாட்டியாக** அமைந்தது டிஜிட்டல் முறையிலான புள்ளி விவரங்களே.
   - **கண்ணாடி வழங்கும் திட்டமும் டிஜிட்டல்** முறையால் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்களின் மூலமே அமலானது.

## மத்திய செய்திகள்

1. குழந்தைகள் திருமணம் ஜார்க்கண்ட் முதலிடம்
   - குழந்தை திருமணங்கள் குறித்து **ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர்** அலுவலகம் ஆய்வு நடத்தியது.
   - இதில் நாட்டில் அதிக குழந்தை திருமணம் நடக்கும் மாநிலமாக ஜார்கண்ட் உள்ளது.
   - இம்மாநிலத்தில் குழந்தை திருமணம் செய்து கொள்ளும் பெண்களின் **சதவீதம் 5.8** ஆக உயர்ந்துள்ளது.
   - தேசிய அளவில் குழந்தை திருமணங்கள் செய்து கொள்ளும் பெண்களின் **சதவீதம் 1.9%** ஆகும்.
   - ஜார்க்கண்டில் குழந்தை திருமணங்கள் கிராமப்புறங்களில் **7.3 சதவீதமாகவும்**, நகர்ப்புறங்களில் மூன்று சதவீதமாகவும் உள்ளன.
   - ஜார்க்கண்ட் மற்றும் மேற்குவங்கம் ஆகிய இரண்டு மாநிலங்களில் மட்டுமே

பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 21 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொள்கின்றனர்.

- மேற்கு வங்கத்தில் **54.9% பெண்கள் 21 வயதை** அடைவதற்கு முன்பே திருமணம் செய்து கொள்கிறார்கள்.
- ஜார்கண்டில் இந்த எண்ணிக்கை **54.6 சதவீதமாக** உள்ளது. இதன் தேசிய சராசரி **29.5 சதவீதமாக** உள்ளது.

## 2. விமானப்படைகள் புதிய ஆயுதப் பிரிவு

- இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கென தனி ஆயுத அமைப்பு பிரிவை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாக அப்படையின் தலைமை தளபதி வி.ஆர்.சௌதரி தெரிவித்துள்ளார்.
- **'அக்னிபத்'** திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டு முதல் பெண்களும் விமானப்படைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
- **இந்திய விமானப்படையின் 90 வது நிறுவன தினம் சண்டிகரில்** உள்ள விமானப்படை தளத்தில் நடைபெற்றது.
- **தனி ஆயுத பிரிவு:**
  - விமானப்படை அதிகாரிகளுக்கென தனி ஆயுத அமைப்பு பிரிவை உருவாக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - இந்த பிரிவு அமைக்கப்படுவது **சுதந்திரத்திற்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.**
  - தரையிலும் மாநிலம் உள்ள இலக்குகளை தரையில் இருந்து தாக்கி அளிக்கும் ஏவுகணைகள் தொலைவில் இருந்து **'ரிமோட்'** வாயிலாக கட்டுப்படுத்தக்கூடிய விமானங்கள் , விமானங்களில் இடம்பெறும் ஆயுதங்கள் உள்ளிட்டவை ஆயுத அமைப்பு பிரிவில் இடம் பெறும்.
  - இதன் மூலமாக அதிகாரிகளுக்கு எளிதில் பயிற்சி அளிக்க முடியும். அதனால் **ரூபாய் 3400 கோடி** வரை சேமிக்கப்படும்.